# Gospel Truth
# காஸ்பெல் ட்ரூத்
உலகளாவிய திருச்சபைகளை ஊக்குவிப்பதற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 47 | International Editor : MICHAEL W.SMITH | இதழ் - 47


## பாவம் மிகுதி ஆயிற்று

உலகமானது இருளிலே இருக்கிறது. பாவம் சூழ்ந்திருக்கிறது. உலக இன்பங்களினாலும் இருதயமும் மனமும் குருடாக்கப்பட்டுள்ளது. தேவ வார்த்தையின் பரிசுத்தத்தில் இருந்து இந்த சமுதாயமானது தூரமாக விலகிக் கொண்டே இருக்கிறது. பெயர் கிறிஸ்தவர்கள் உலகத்தின் மீது நாட்டம் கொண்ட மனநிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். திருமணம் என்பது வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் ஒரு உறவாக எல்லோராலும் கருதப்பட்டாலும் இன்று அதைவிட மேலாக ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையேயான உறவு நிலை என்பதை உலக மறந்து கொண்டே இருக்கிறது. தேவனை மறந்து போன இந்த சந்ததியரின் நம்பிக்கைதான் என்ன?

சில வருடங்களுக்கு முன்பு எய்ட்ஸ் வியாதியினால் பாதிக்கப்பட்டு மரணத்தை எதிர்நோக்கி படுக்கையிலே மருத்துவமனையில் இருந்த ஒரு இளம் வாலிபனை போதகர் ஒருவர் சந்தித்தார்.அந்த ஊழியர் அவரைப் பார்த்தபோது நீ மரிக்கும்போது நரகத்திற்கு சென்று விடுவாய். என்று தானே கூற போகிறீர்கள் உங்களோடு பேச எனக்கு விருப்பமில்லை என்று அந்த இளைஞன் கூறிவிட்டான். அந்த ஊழியரோ இல்லை சகோதரனே நான் இயேசு உன் மீது கொண்ட அன்பை கூற வந்தேன் என்றார். பெரும் பாவத்திற்கு உடன்பட்டு ஓரின சேர்க்கை பாவத்தை செய்து வியாதிப்பட்ட அந்த இளைஞனுக்கு இயேசுவின் அன்பை அவர் போதிக்க தொடங்கினார். யோவான் 3 : 16 -17 வசனத்தின் படி தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாக தீர்க்கும் படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல் அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்.

அந்த போதகர் தொடர்ந்து இயேசுவின் அன்பை குறித்து விவரிக்க தொடங்கிய போது மரண தருவாயில் இருந்த அந்த இளைஞனின் கண்களில் கண்ணீர் வடிய தொடங்கியது. என்னை மன்னியும் இயேசுவே என்று சொல்லி தம் பாவங்களை அறிக்கையிட்டு கதறி அழுது ஜெபித்தான் அந்த இளைஞன்.

அந்த நொடியிலே பாவங்கள் பற்றி இயேசுவுக்குள் அவன் புது சிருஷ்டியானான். பழையவைகள் எல்லாம் ஒழிந்து போயின. எல்லாம் புதிதாயின (2 கொரி 5: 17 ).அவன் குடும்பத்தாரால் புறக்கணிக்கப்பட்டான் . அவனை சுற்றி இருக்கும் மக்களால் காயப்படுத்தப்பட்டான். ஆனால் இயேசு கிறிஸ்துவின் அன்பினால் முழுவதும் பாவத்திலிருந்து அந்த இளைஞன் கழுவப்பட்டான். புது சிருஷ்டியானான் . அதன் சிறு அடையாளமாக அவன் மாற்றப்பட்டதை வெளிப்படுத்தும் பொருட்டு அந்த இளைஞன் மருத்துவமனையில் இருந்த செவிலியரை அழைத்து தனக்கு ஒரு சாதாரண மருத்துவமனை உடையை வழங்குமாறு கேட்டு வாங்கி அதை அணிந்து கொண்டார். அவருடைய அடக்க ஆராதனையில் இந்த போதகரை பேசும்படி அழைத்தார். அங்கே வரும் தமது பாவ நண்பர்களுக்கும் பரிசுத்தர் இயேசுவின் அன்பை சொல்ல ஆசைப்பட்டார்.


அல்லேலூயா தேவனுக்கே துதி உண்டாகட்டும் தாவீது சொன்னது போல உமக்கு பயப்படும்படிக்கு உம்மிடத்தில் மன்னிப்பு உண்டு (சங்கீதம் 130 : 4). இயேசுவின் அன்பும் மன்னிப்பும் இன்றளவும் எல்லாருக்கும் சமீபமாய் இருக்கிறது. எவ்வளவு பெரிய பாவியாக இருந்தாலும் இயேசுவினிடத்தில் மன்னிப்பு உண்டு. பாவிகளை இரட்சிக்கவே கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் (1 தீமோ 1 : 15). பரிசேயரால் குற்றம் கண்டுபிடிக்கப்பட்டு இயேசுவினிடத்தில் அழைத்துவரப்பட்ட விபச்சார ஸ்திரீயை குறித்து வேதத்தில் வாசிக்கிறோம்.



**இயேசுவின் அன்பும் மன்னிப்பும் இன்றளவும் எல்லாருக்கும் சமீபமாய் இருக்கிறது. எவ்வளவு பெரிய பாவியாக இருந்தாலும் இயேசுவினிடத்தில் மன்னிப்பு உண்டு.**


| தலையங்கம் | வேதபாடம் ஓரினச்சேர்க்கை மற்றும் விலகுதல் | துணை கட்டுரை ஓரினச்சேர்க்கை மற்றும் விலகுதல் | கேள்வி பதில் | உங்களுக்கு தெரியுமா? ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை ஒருவர் பாரத்தை ஒருவர் சுமருங்கள் |
|---|---|---|---|---|
| 3 | 4 | 5-6 | 7 | 8 |

# வேதாகமம்,



## நமக்கு போதிப்பது என்ன..... ?

**தேவனுடைய வார்த்தை**
2 தீமோ 3 : 16-17 ; 2 பேது 1 : 20-21 ;
மத் 24 : 35

**அன்பு**
மத் 22 : 37-40 ; யோவா 14 : 21-23,
1 யோவா 4 : 7-11

**மனந்திரும்புதல் :**
அப் 3 : 19 ; 17 : 30 ; 2 கொரி 7 : 10

**புதுசிருஷ்டி**
யோவா 3 : 3-7 ; 2 கொரி 5 : 17 ; ரோம 6 : 1-4,
எபே 2 : 1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**
1 யோவா 5 : 18 ; மத் 1 : 21 ; யோவா 8 : 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**
அப் 1 : 8 ; 15 : 8-9 ; 19 : 2

**பரிசுத்தம் :**
லூக் 1 : 73-75 ; எபி 12 : 14 ; 1 பேது 1 :15-16 ;
தீத்து 2 : 11-12 ; ரோம 6 : 22

**தேவனுடைய இராஜ்யம்**
லூக் 17 : 20-21 ; ரோம 14 : 17 ; யோவா 18 : 36.

**சபை-** அப் 2 : 47 ; எபே 4 : 4-6 ;
1 கொரி 12 : 12-13 ; கொலோ 1 : 18

**ஒற்றுமை**
யோ 17 : 20-23 ; கலா 3 : 28 ;
வெளி 18 : 2-4

**நியமங்கள்**
மத் 28 : 19-20 ; 26 : 26-30 ;
1 கொரி 11 : 23-27 ; யோவா 13 : 14-17

**தெய்வீக சுகமளிப்பு**
லூக் 4 : 18, ஏசா 53 : 4,5, யாக் 5 : 13-16

**விவாக முறைமை**
மத் 19 : 5-6 ; லூக் 16 : 18 ; ரோம 7 : 2-3 ;
1 கொரி 7 : 10, 11

**வெளிப்புற தோற்றம்**
1 தீமோ 2 : 9-10 ; 1 கொரி 11 : 14-15 ;
உபா 22 : 5

**கடைசிகாலம்**
2 பேது 3 : 7-12 ; யோவா 5 : 28,29 ;
2 கொரி 5 : 10 ; மத் 25 : 31-46

**தொழுதுகொள்ளுதல்**
யோவா 4 : 23,24 ; எபே 5 : 19 ;
2 கொரி 3 : 17

**சுவிசேஷ அறிவித்தல்**
மாற் 16 : 15

இயேசு அவளை ஆக்கினைக்குள்ளாக தீர்ப்பார் என்று எண்ணினார்கள். ஆனால் இயேசு அவர்களிடத்தில் நான் உன்னை ஆக்கினைக்குள்ளாக தீர்க்கவில்லை. போ இனி பாவம் செய்யாதே என்றார் (யோவான் 8: 11).மற்றவர்களுடைய நியாயத்தீர்ப்புக்கு மத்தியில் அந்த ஸ்திரீயை இயேசு புறம்பே தள்ளவில்லை. அவளுக்கு அவர் நம்பிக்கை தந்து பாவம் செய்யாதிருக்கும் படி கட்டளை யிட்டார். இயேசுவின் அன்பு பாவத்தை மன்னிக்க வல்லது என்று உலகம் கூறுகையில் இயேசுவின் அன்பின் வல்லமை பாவத்தை நீக்கி முற்றிலும் கழுவி பரிசுத்தப்படுத்தி நம்மை பாவம் இன்றி வாழ வைக்க வல்லது.கிணற்றின் அருகே இயேசு கிறிஸ்து சந்தித்த ஒரு ஸ்திரீயை குறித்து மற்றொரு சம்பவத்தை பார்க்கலாம்.அவள் தனக்கு புருஷன் இல்லை என்று கூறினாள். இயேசு அவளிடம் நீ சொல்வது சரியே.

> ஜனங்கள் லௌகீக இச்சையினாலும் மாம்சீக இன்பங்களினாலும் தங்களுக்கென்று நோக்கம், அடையாளம் மற்றும் அதினால் திருப்தியடைய முற்படுகின்றார்கள்.

ஐந்து புருஷர் உனக்கு இருந்தார்கள். இப்போது இருக்கிறவன் உனக்கு புருஷன் அல்ல.அதை உள்ளபடி சொன்னாய் என்றார் (யோவான் 4 :18). ஒருபோதும் தாகம் உண்டாகாத ஜீவத்தண்ணீரை நான் உனக்கு தருகிறேன் என்றார். இந்த ஸ்திரீயை போல தான் பலர் இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு உறவை விட்டு இன்னொரு உறவுக்குள் செல்லும்போது அவர்கள் இச்சைகள் நிறைவாகாது ஏனெனில் அவர்கள் மாம்ச இச்சைக்கு உடன்பட்டு லௌகீக இன்பங்களினால் திளைத்து போய் திருப்தியாக முற்படுகிறார்கள். ஏன் அவைகளால் அவர்கள் திருப்தி ஆகாததால் இன்னும் அதிகமாக பாவத்தின் ஆழத்திற்கு சென்று சமாதானத்தை தேடுகிறார்கள்.ஆனால் உண்மையான சமாதானம் அங்கே இல்லை.
ஆத்தும ஆதாயம் செய்வதற்காகவே இயேசு இவ்வுலகில் வந்தார். பாவங்களை அறிக்கையிட்டு அவைகளை விட்டுவிடுகிற யாவருக்கும் இயேசுவினிடத்தில் திரளான மீட்பும், மன்னிப்பும் உண்மையான சமாதானமும் உண்டு.

கொரிந்து சபையின் பரிசுத்தவான்களுக்கு எழுதுகிற போது யாரெல்லாம் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை : விபச்சாரக்காரரும் வேசி மார்க்கத்தாரும் விக்கிரக ஆராதனைக்காரரும் சுய புணர்ச்சிக்காரரும் ஆண் புணர்ச்சிக்காரரும் திருடரும் பொருளாசைக்காரரும் வெறியரும் உதாசினரும் கொள்ளைக்காரர்களும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை (1 கொரிந்தியர் 6 : 11). உங்களில் சிலர் இப்படி இருந்தீர்கள் ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும் நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள். பரிசுத்தமாக்கப்பட்டீர்கள். நீதிமான்களாகப்பட்டீர்கள். தீங்கான உலகில் இந்த மகிழ்ச்சியான வார்த்தைகள் மனதை சந்தோஷப்படுத்துகிறது. உங்களிலும் சிலர் ஆனால் யாரெல்லாம் எப்படி வாழ்ந்தார்கள் என்பதை விட எல்லோருக்கும் இயேசு கிறிஸ்துவினிடத்தில் மீட்பு உண்டு. பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாக பெருகுகின்றது (ரோமர் 5:20). மாம்சீக இச்சைகளை மேற்கொண்டு ஜெயிக்கும் வல்லமை இயேசுவினிடத்தில் உண்டு. ஆகவே இயேசுவை குறித்து சொல்லுங்கள். இயேசுவின் அன்பை உலகிற்கு அறிவியுங்கள். இரட்சிப்பை தெரிவியுங்கள். இயேசு கிறிஸ்துவின் சமாதானத்தையும் விசுவாசத்தையும் அறிக்கையிடுங்கள்.

**புருஷனானவன் ஸ்திரீயாகவும் ஸ்திரீயானவள் புருஷனாகவும்**
**இயற்கைக்கு மாறாக நடக்கிறார்கள்**
**கணவன் மனைவியாக ஸ்திரீகளே வாழ்கிறார்கள்**
**என்ன வேதனையான காட்சி கொடுமையான நடத்தை**
**கிளமெண்ட் ஆப் அலெக்சென்ட்ரியா**
( ஆதிகால சபை , 195 )

*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம். எங்களுடைய இதழை ஆன்லைனில் படிக்க* **www.thegospeltruth.org** *என்ற இணையதள முகவரியை பார்க்கவும். உங்களது கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் தெரிந்த விசுவாசிகளுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள். படங்கள் அனைத்தும் அனுமதியோடே அச்சிடப்பட்டுள்ளது. உங்கள் கருத்துக்களையும் நன்கொடைகளையும் அனுப்பவேண்டிய முகவரி :-*

**ஆயர். W.S.வேதா, காஸ்பெல் ட்ரூத், 2/227, சர்ச் தெரு,**
**கோலார்பட்டி , தென் இந்தியா - 642 107**

Editorial

# ஆசிரியரின் தலையங்கம்

ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்கமனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு,சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங்காலம் வரும்.2 தீமோ 4: 3 -4

பவுல் இந்த வார்த்தையை ஜாக்கிரதையாய் பிரசங்கிக்கும்படி தீமோத்தேயுவுக்கு அறிவுறுத்துகிறார். விசுவாசத்தோடும் தைரியத்தோடும் தொடர்ந்து தேவனுடைய வார்த்தையை போதிக்கவும் அதன்படி நடக்கவும் தேவன் தாமே நமக்கு உதவி செய்வாராக. ஜாக்கிரதையாய் நடக்க வேண்டிய தேவனுடைய சத்திய வசனத்திற்கு செவி சாய்க்க பலருக்கு மனதில்லை. தேவ சத்தியத்திற்கு மாறாக நடக்கும் தங்களுக்கு சாதகமான போதகர்களை தேடி அங்கே சேர்ந்து கொள்வதை வழக்கமாக்கி கெட்டுப் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

இந்த மாத இதழானது ஓரினச்சேர்க்கை மற்றும் பாலின ஒழுங்குகள் குறித்த கடினமான உபதேசத்தை சுமந்து வருகிறது. கடந்த காலங்களில் பத்திரிகையில் எழுத வேண்டிய தலைப்புகளில் இல்லாத ஒன்று இந்த நாட்களுக்கு மிக மிக தேவையானதாகி வருகிறது. தேவன் எச்சரிக்கும் வார்த்தைகள் இன்றைய சமுதாயத்தில் பெரியவர்களுக்கும் குழந்தைகளுக்கும் மிக மிக அவசியமாய் இருக்கிறது. ஆண்களில் வயது (11-26) 17 - 18% அதாவது ஐந்தில் ஒருவர் என்ற விகிதத்தில் லெஸ்பியன் ஓரினச்சேர்க்கை யாளர்கள் பெருகிகொண்டே இருக்கின்றனர். நம்முடைய நாட்களில் இது மிகப்பெரிய பிரச்சனையாக உருவெடுத்துள்ளது. இந்த இச்சைகளால் இழுப்புண்டு என்ன செய்வதென்று பல கேள்விகளோடு இளம் தலைமுறையினர் பலரும் போராடிக் கொண்டிருக்கின்றனர். கிறிஸ்தவர்களாகிய நாம் வேதத்தில் சொல்லப்பட்டுள்ளதால் இதைக் குறித்து கவனமாய் நடந்து கொள்ள அழைக்கப்படுகிறோம். நாம் இந்த சத்தியத்தை அறிவிக்காவிடில் ஓரினச் சேர்க்கையாளர்களின் குரல் மேலோங்கி தவறான சமுதாயம் வளர வழி வகுக்கும். கிறிஸ்தவ சமுதாயத்தில் பெயர் கிறிஸ்தவர்களாக இருக்கிறவர்கள் தெளிவான வேத சத்தியத்தை புரட்டி தங்களுக்கு ஏற்றபடி மாற்ற முயற்சிக்கிறதை எண்ணி நான் மிகவும் வேதனைப்படுகிறேன். வேத வார்த்தைக்கு கீழ்ப்படிய நாம் அழைக்கப்பட்டுள்ளோம். சில வருடங்களுக்கு முன்பு இரண்டு ஓரினச்சேர்க்கையாளரான மனிதர்கள் பெண்கள் அணியும் ஆடைகளை வாங்குவதற்காக கடைகளில் அலைந்து கொண்டிருந்ததை நான் என் மனைவியிடம் கூறி வேதனைப்பட்டதை தேவன் எனக்கு இப்போது நினைவுபடுத்தினார். அவர்களுக்காகவும் இயேசு கிறிஸ்து மரித்தார். இயேசு அவர்களையும் நேசிக்கிறார். நாம் அவருடைய அன்பை அறிவிக்கும் அவருடைய ஊழியர்கள். ஓரினச்சேர்க்கையாளர்களையும் அவர்களுடைய ஆதரவாளர்களையும் வெறுக்கிறவர்களையும் எதிர்த்து குரல் எழுப்புகிறவர்களையும் சமூக வெறுப்பாளர்களாக சித்தரிக்கிறார்கள். பாவத்தை குறித்து கண்டித்து உணர்த்துகிற நாம் சமூக வெறுப்பாளர்களோ அல்லது அன்பில்லாதவர்களாகவோ அல்ல. நாம் இந்த விஷயத்தில் தெளிவு உள்ளவர்களாக இருக்க வேண்டும். உண்மையான தேவபிள்ளைகள் பாவிகளை நேசித்து அழைத்து தேவ சத்தியத்தையும் நற்செய்தியையும் அவர்கள் அறியும்படி போதிக்க வேண்டும். அவர்களும் நம் அருகில் இருக்கும் உறவுகள் நண்பர்கள் மற்றும் குடும்பத்தாரை பாவத்தோடு ஒருவர் வாழ்ந்து கொண்டிருக்கிறார் எனில் அவருக்குள் மற்ற திறமைகளும் நல்ல பழக்க வழக்கங்களோ இல்லை என்று நாம் தீர்மானித்து ஒதுக்கி விட முடியாது. பாவத்தை நாம் வெறுக்கவும் அதேசமயம் பாவிகளை நேசிக்கவும் அறிந்து கொள்ள வேண்டும்.நம் சமுதாயம் ஒழுக்க நெறிகளை மறந்து போய் கெட்டு சீரழிந்து கொண்டிருக்கிறது. ஆனால் இயேசு கிறிஸ்துவின் வல்லமையான தேவ வார்த்தையானது பரிசுத்தத்தையும் ஒழுக்கத்தையும் ஒவ்வொரு மனுஷனுடைய இருதயத்திலும் முழுமையாக்க வல்லது. நம்மை சுற்றி நடக்கும் விஷயங்களில் பொறுமையோடு சகித்து உங்களை பாதுகாத்துக் கொள்ள உற்சாகப்படுத்துகிறேன். பாவிகளை ஏற்கவும் பாவ வாழ்வை வெறுக்கவும் பழகிக்கொண்டு தெய்வத்திட்டத்திற்கு மாறான விஷயங்களில் தெளிவாக நடந்து கொள்ளுங்கள். இழந்து போன ஜனங்களுக்கும் இந்த உலகத்திற்கும் வெளிச்சமாய் அன்பாய் நம்பிக்கையின் விளக்காய் நாம் இருக்க தேவன் தாமே அவருடைய இரக்கத்தினால் முடிசூட்டுவாராக ஆமென்.

ஆன்லைனில்

**அதிகமாக தெரிந்துகொள்ள**

*www.thegospeltruth.org*

**பதிவுசெய்து வெளியீட்டு காப்பகங்களுக்குள் உள்நுழைக**



# வேதபாட வழிகாட்டி

## பொருள் : ஓரினச்சேர்க்கை மற்றும் விலகுதல்

**வேத வாசிப்பு :** அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும்,திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை.
1 கொரி 6 : 9 - 10

**செய்திச் சுருக்கம் :** வேதம் நமக்கு போதிக்கிறது ஓரினச்சேர்க்கை என்பது பாவம் தேவன் தந்த இயற்கைக்கும் மாறாக ஒரே இனத்தை சேர்ந்த இருவருக்குள் இருக்கும் உறவானது தவறான நடத்தை குறிக்கிறது திட்டத்தையும் நோக்கத்தையும் ஆற்றும் படி உயிரியல் பாலின அடையாள அமைப்பிற்கும் மாறாக செயல்பட இந்த சமுதாயம் முயற்சிக்கிறது. இயேசு இந்த ஓரினச்சேர்க்கையாளர்களை நேசிக்கிறார் அவர்களுக்காகவும் மதித்தார் அவர்களுக்கும் இரட்சிப்பு சமீபமாய் இருக்கிறது

### I.சத்தியத்தின் நியமம்

A.2 தீமோ 3:16 வேத வாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவினால் அருளப்பட்டிருக்கிறது
B.யோவான் 8 : 32 சத்தியம் உங்களை விடுதலையாக்கும்
C. ஏசாயா 5:20 -21 தீமையை நன்மை என்றும்

### II. பழைய ஏற்பாடு ஓரினச்சேர்க்கையாளரையும் மிருகப் புணர்ச்சியையும் எதிர்கிறது

A.லேவி 18 :22 -24 பெண்ணோடு சமயோகம் பண்ணுகிறது போல ஆணோடே சம்யோகம் பண்ண வேண்டாம்
B.லேவி 20 :13 -16 அருவருப்பான தாறுமாறு மூன்று

### III. ஓரினச்சேர்க்கை என்பது புதிய ஏற்பாட்டுக்கு முரண் ஆனது

A.ரோமர் 1 : 24- 28 ஓரினச்சேர்க்கை என்பது மாம்சீக இச்சை இயற்கைக்கு எதிரானது.
B.1 கொரி 6: 9 -11 சுய புணர்ச்சிக்காரர் ஆண் புணர்ச்சிக்காரர் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை
C.1 தீமோ 1 : 9-10 ஓரினச்சேர்க்கை தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்கு எதிரிடையானது

### IV.பாலின ஒழுக்க கேடு பாவம்

A.கொலோ 3 : 5 - 6 தீங்கான எல்லா செயல்களையும் அழித்து போடுங்கள்.
B. மத்தேயு 15 : 19 -20 விபச்சாரமும் வேசித்தனமும் மனுஷனை தீட்டுப்படுத்தும்
C.1 கொரி 6 : 18 சரீரத்துக்கு விரோதமான பாவம்
D.கலா 5: 19 -21 மாம்சத்தின் கிரியைகள்

### V. விவாகம் புருஷனுக்கும் ஸ்திரீக்கும் உள்ள உறவு

A. ஆதி 2 : 18, 22- 24 தேவன் மனுஷனுக்கு ஏற்ற துணையை உண்டாக்கினார்
B. மத் 19 : 5- 6 அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாய் இருப்பார்கள்
C. எபேசியர் 5 : 31 இருவரும் ஒரே மாம்சமாய் இருப்பார்கள்

### VI. பாலின அடையாளம்

A.ஆதி 1 :27 -28 நீங்கள் பழுகி பெருகுங்கள்.
B. மத்தேயு 19 : 4 தேவன் அவர்களை ஆணும் பெண்ணும் ஆக உண்டாக்கினார்
C. உபா 22 : 5 புருஷர்கள் தரிப்பது கர்த்தருக்கு அருவருப்பானது
D.1கொரி 6 : 9 சுய இன்பங்களும் மாம்சீக இன்பங்களும்

### VII.தேவனுடைய நியாயத் தீர்ப்பு

A. ஆதியாகமம் 19 :1 -14 சோதோம் மற்றும் கோமாரா
B. யூதா 1 :7 நித்தியஅக்கினியின் ஆக்கினை

### VIII . உலகத்தின் ஆவியை பெறாதீர்கள்

A. ரோமர் 12: 2 நீங்கள் இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரிக்கலாகாது.
B. 1 கொரி 2 : 12 -13 உலகத்தின் ஆவியை பெறாதீர்கள்
C.1 கொரி 3 : 18 -19 இவ்வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாக பைத்தியமாய் இருக்கிறது
D.1 யோவா 2:15 - 17 உலகத்தில் அன்பு கூறாதீர்கள்

### IX.தேவன் ஓரினச்சேர்க்கையாளர்களை நேசிக்கிறார்

A. யோவான் 3 :16 தேவன் இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்
B. ரோமர் 5: 8 நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்தார்

### X.யாவருக்கும் மீட்பும் சமாதானமும்

A. 1 யோவா 1: 9 எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பார்
B.2கொரி 5: 17- 18 கிறிஸ்துவுக்குள் எல்லாம் புதிதாயின
C.வெளி 22: 17 விருப்பம் உள்ளவன்

**முடிவு :**

உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்;
ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும்,
நமது தேவனுடைய ஆவியினாலும்
கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள்,
நீதிமான்களாக்கப்பட்டீர்கள்.1 கொரி 6: 11

# ஓரினச்சேர்க்கை
# & விலகுதல்

தேவனாகிய கர்த்தர் தம் தெய்வீக திட்டத்தின் படி ஆணும் பெண்ணும் ஆக சிருஷ்டித்து பரிசுத்தமாய் வாழ்ந்து தேவன் நாமத்தை மகிமைப்படுத்தும் படியாக விரும்பினார் கலாச்சாரம் அரசியல் மத ரீதியிலான உடன்பாடுகள் எதையும் பொருட்படுத்தாமல் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்த ஓரினச்சேர்க்கையாளர் மற்றும் திருநங்கைகள் சமுதாயத்தினரின் சீர்கேடான காரியங்களை நிமித்தம் தெய்வ வார்த்தை இதை பாவம் என்று எச்சரிக்கிறது



**சத்தியம் என்றும் மாறாது. இருப்பினும் மாற்றத்திற்கு இந்த சமுதாயம் இடம் கொடுக்கிறது.**

### சத்தியத்தின் நியமம்

சத்தியம் என்று மாறாது இருப்பினும் மாற்றத்திற்கு இந்த சமுதாயம் இடம் கொடுக்கிறது. உலக மனிதர்கள் யாருடைய மனநிலையிலும் ஒரே ஒழுக்கமான நெறிகள் இருப்பதில்லை. ஒன்றை ஒன்று சார்ந்தே இருக்கிறது. வேதாகமம் என்பது தேவனுடைய அனுக்கிரகமான வார்த்தை (2 தீமோ 3 : 16). தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது . பரலோகத்தின் படிகளில் ஏறுவதற்கான சத்தியங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது . தேவசத்தியங்கள் யாவும் நாம் தேவனோடு சமாதானமாய் இருக்கவும் விடுதலையோடு வாழவும் எழுதப்பட்டிருக்கிறது. தீமையை நன்மையென்றும், நன்மையைத் தீமையென்றும் சொல்லி, இருளை வெளிச்சமும், வெளிச்சத்தை இருளுமாகப் பாவித்து, கசப்பைத் தித்திப்பும், தித்திப்பைக் கசப்புமென்று சாதிக்கிறவர்களுக்கு ஐயோ! ஏசாயா 5:20 .இதுதான் நம் உலகின் நிலைமை ஆகவே அன்பிலே நிலைத்திருப்பது மாத்திரமல்ல, தேவனுடைய சத்தியத்தில் நிலைத்திருப்பதே நம் தலையாய கடமை . தேவனுடைய வார்த்தையை பிரதானமாக கொண்டு மாறாமல் பிரசங்கிக்க வேண்டும் **லெஸ்பியன்** **LGBTQ** சமுதாயத்தின் தாக்கம் ஒருபோதும் தலைமுறைக்கு பாதிப்பை ஏற்படுத்தாதபடிக்கு கவனம் தேவை. லெஸ்பியன் கூட்டத்தாரின் ஆதிக்கம் மிகுதி .சமுதாய சீரழிவுக்கு சமுதாயத்திரை மறைவின்றி வெளியரங்கமாய் கர்த்தர் தீர்மானித்த குடும்ப அமைப்புக்கே சவால் விடும் அருவருப்பான காரியங்களை செய்து வருகிறார்கள்.

ஓரினச்சேர்க்கையாளர்கள் மற்றும் திருநங்கைகள் சமூக வலைதளங்கள் மற்றும் தொலைதொடர்பு அமைப்புகள் மூலம் ஓரளவு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. வெளிப்படையாக சிலர் ஆதரிக்காவிட்டாலும் அதை ஏற்றுக் கொண்டு வாழும் மனநிலையில் பலர் உள்ளனர் .ஓரினச்சேர்க்கை மிருகப் புணர்ச்சி இவை எல்லாம் தேவ வார்த்தை கண்டித்து உணர்த்துகிறது **.லெஸ்பியன் LGBTQ** காரியங்கள் மகா பாவமானவை

### பழைய ஏற்பாடு கண்டிக்கும் பாவங்கள் ஆகிய ஓரினச்சேர்க்கையும் மிருகப் புணர்ச்சியும்

பழைய ஏற்பாடு ஓரினச்சேர்க்கையை கண்டிக்கிறது. பெண்ணோடு சம்யோகம் பண்ணுகிறதுபோல ஆணோடே சம்யோகம் பண்ணவேண்டாம்; அது அருவருப்பானது. யாதொரு மிருகத்தோடும் நீ புணர்ச்சிசெய்து, அதினாலே உன்னைத் தீட்டுப்படுத்த வேண்டாம்; ஸ்திரீயானவள் மிருகத்தோடே புணரும்படி அதற்கு முன்பாக நிற்கலாகாது; அது அருவருப்பான தாறுமாறு. இவைகளில் ஒன்றினாலும் உங்களைத் தீட்டுப்படுத்தாதிருங்கள்; நான் உங்கள் முன்னின்று துரத்திவிடுகிற ஜாதிகள் இவைகளெல்லாவற்றினாலும் தங்களைத் தீட்டுப்படுத்தியிருக்கிறார்கள்; தேசமும் தீட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது (லேவி 18 :22- 24) முறைகேடு உங்களுக்குள் இராதபடிக்கு, அவனையும் அவர்களையும் அக்கினியில் சுட்டெரிக்கவேண்டும் (லேவி 20 : 13- 16).

### புதிய ஏற்பாடு போதனை

மோசே நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டு நாம் வாழவில்லை. மாறாக புதிய ஏற்பாடும் ஓரினச்சேர்க்கை பாவம் என்று அறிவுறுத்துகிறது. மாம்சீகத்தின் அடிமைத்தனத்தினால் சிருஷ்டிப்பின் நாயகரை மறந்து அற்பமான ஆசை இச்சைகளுக்கு இணங்கி பெண்கள் சுபாவ அநுபோகத்தைச் சுபாவத்துக்கு விரோதமான அநுபோகமாக மாற்றினார்கள் (ரோமர் 1 : 24- 28). 1 கொரி 6: 9- 11 இல் தேவனுடைய இராஜ்ஜியத்தை யாரெல்லாம் சுதந்தரிக்க இயலாது என்று சொல்லப்பட்டுள்ளது. எங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, நியாயப்பிரமாணம் நீதிமானுக்கு விதிக்கப்படாமல், அக்கிரமக்காரருக்கும், அடங்காதவர்களுக்கும், பக்தியில்லாத வர்களுக்கும், பாவிகளுக்கும், அசுத்தருக்கும், சீர்கெட்டவர்களுக்கும், தாய்தகப்பன்மாரை அடிக்கிறவர்களுக்கும், கொலைபாதக ருக்கும்,வேசிக்கள்ளருக்கும், ஆண்புணர்ச்சிக் காரருக்கும், மனுஷரைத் திருடுகிறவர்களுக்கும், பொய்யருக்கும், பொய்யாணை இடுகிறவர்களுக்கும் (1 தீமோ 1 : 9–10).

### பாலின ஒழுக்கக்கேடு பாவம்

எல்லாவிதமான ஒழுக்க கேடும் பாவமே. அது விபச்சாரமோ வேசித்தனமோ எதுவாக இருந்தாலும் பாவம். கொலோ 3 : 5–6இல் ஆகையால், விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள்.இவைகளின் பொருட்டே கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினை வரும்.

வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள். மனுஷன் செய்கிற எந்தப் பாவமும் சரீரத்திற்குப் புறம்பாயிருக்கும்; வேசித்தனஞ்செய்கிறவனோ தன் சுயசரீரத்திற்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிறான் (1 கொரிந்தியர் 6 : 18). இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை (கலா 5 : 19 – 21).

### புருஷனுக்கும் ஸ்திரீக்கும் இடையேயானதுதான் திருமண பந்தம்.



**நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். (I யோவான் 1 : 9 )**

நமது கலாச்சாரத்தில் இன்றைய தலைமுறையினர் இடையே திருமண பந்தம் என்பது மாற்றப்பட்டுள்ளது. ஆனால் ஆதியிலே தேவன் ஆதாம் ஏவாளை ஆணும் பெண்ணும் ஆக சிருஷ்டித்து அவர்கள் ஒரே மாம்சமாய் இருப்பார்கள் என்றார் (ஆதி 2 : 18, 21 -24 ) .கர்த்தர் இரண்டு ஸ்திரீகளையோ அல்ல இரண்டு புருஷர்களையோ அப்படிப்பட்ட உறவை தரும்படி உண்டாக்கவில்லை. வேதாகமம் நமக்கு கூறுகிறபடி திருமண பந்தம் என்பது ஆண், பெண் இவர்களுக்கிடையே ஏற்படுத்தப்பட்டது.இயேசு மத் 19 : 5-6 ல் இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதையும், நீங்கள் வாசிக்கவில்லையா? இப்படி இருக்கிறபடியினால், அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்; ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றார்.இந்த தெய்வத்திட்டத்தை மீறுவது பாவம்.

### பாலின அடையாளம்

ஓரினச்சேர்க்கை என்பது புதிதல்ல. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இருக்கிறது. நம் தலைமுறையினர் வாழ்கின்ற இந்த நாட்களில் இந்த கொடிய பாவம் பெருக தொடங்கி இருப்பதுதான் வேதனை. மாம்சஇச்சை நிமித்தம் தங்களுடைய பாலின அடையாளத்தை தாங்களே மாற்றிக் கொள்ளவும் உயிரியல் அமைப்பை தாண்டி தாங்கள் நினைத்த இனத்தை அடையவும் முயற்சிக்கிறார்கள். ஆண்கள் தங்களை பெண்களாகவும் பெண்கள் ஆண்களாகவும் மாற்றுகிறார்கள். மேலும் சிலர் இன்னும் அதிகமாக மிருகங்களாகவே மாறிக் கொண்டிருக்கின்றனர். இந்த மாறுதலான அருவருக்கத்தக்க காரியங்களுக்கு உலகம் செவி சாய்க்கிறது. தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். ஆதியாகமம் 1 : 27
2 பாலினங்கள் மட்டுமே வேதாகமத்தில் உண்டு ஆண் மற்றும் பெண். பாலினம் என்பது நமது உரிமை அல்ல .மாறாக தேவனால் தீர்மானிக்கப்பட்டு உயிரியல் ரீதியாக இயற்கையாக பிரதிபலிப்பது . இதையும் மீறி ஹார்மோன் சிகிச்சைகள் பலவிதமான அறுவை சிகிச்சைகள் மற்றும் ஆடை உடை மாற்றங்களால் சிருஷ்டிப்பின் தேவன் தந்த ஈவு வரங்களை அவமானப்படுத்துகிறோம். தானாக மாற்றம் அடையும் பாலினம் வெறும் 0.05% .சில சமயங்களில் குழந்தைகள் பாலின குறைபாடுகளோடு பிறப்பது வேதனையான காரியமே. மரபணு குறைபாடு பிறப்பால் உருவாவது. நம்முடைய மீறுதல் அன்று. பாலினத்தை நாமே தீர்மானிப்பது தான் மீறுதல். பாலின மாறுதல் பழக்கவழக்கங்கள் யாவும் தேவனுடைய திட்டத்தை மீறி செய்கிற பாவம்.

புருஷரின் உடைகளை ஸ்திரீகள் தரிக்கலாகாது, ஸ்திரீகளின் உடைகளைப் புருஷர் தரிக்கலாகாது; அப்படிச் செய்கிறவர்கள் எல்லாரும் உன் தேவனாகிய கர்த்தருக்கு அருவருப்பானவர்கள். உபா 22 : 5.அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? 1 கொரி 6: 9
பாலின தீர்மானத்தை மாற்ற முயற்சிப்பதும், மாற்றிக்கொள்வதும் மாறுதலாக நடந்து கொள்வதும் பாவமே.

### தெய்வீக நியாயத்தீர்ப்பு

சோதோம் கொமோராவின் மீறுதல்கள் பரலோகத்தை வந்தடைந்தது. அக்கினியும் கந்தகமும் வானத்திலிருந்து இந்த இரு நகரங்கள் மீதும் வருஷிக்கப்பட்டு ஆக்கினைத்தீர்ப்பு நிறைவேற்றப்பட்டது. (ஆதியாகமம் 19 : 1 -14).
யூதா 1 : 7 ல் அப்படியே சோதோம் கொமோரா பட்டணத்தார்களும், அவைகளைச் சூழ்ந்த பட்டணத்தார்களும், அவர்களைப் போல் விபசாரம்பண்ணி, அந்நிய மாம்சத்தைத் தொடர்ந்து, நித்திய அக்கினியின் ஆக்கினையை அடைந்து, திருஷ்டாந்தமாக வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

### உலகத்தின் ஆவி

1 கொரி 2 : 12-13 நாங்களோ உலகத்தின் ஆவியைப்பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம்.அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம்.
நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் (ரோமர் 12 : 2)

### தேவன் லெஸ்பியன் (LGBTQ ) மற்றும் தனிப்பட்டவர்களையும் நேசிக்கிறார்

தேவனுடைய நியாயத்தீர்ப்பு இந்த மாறுபட்ட சந்ததியினரின் மேல் நித்தியஆக்கினை தீர்ப்பாக வெளிப்படும் முன் (யோவான் 3: 16). தேவன் ஒவ்வொருவரையும் நேசிக்கிறார். தேவன் பாவத்தை வெறுக்கிறார். பாவியையோ நேசிக்கிறார். இயேசு எல்லா மனுஷரின் பாவங்களுக்காகவும் மரித்தார் . ஒவ்வொருவருடைய வாழ்க்கை முறை செய்த பாவங்கள் எப்படிப்பட்டதாய் இருப்பினும் (1 யோவான் 1 : 9). இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின (2 கொரி 5 : 17 ).

### இரட்சிப்பு எல்லா ஜனத்திற்கும் பொதுவானது

வேத சத்தியத்தில் நிலை கொண்டிருங்கள். பலவீனப்பட்டு போகாதீர்கள்.எதிரியின் கண்ணியான மாம்ச இச்சைகளுக்குள் அகப்பட்டவர்களுக்காக ஜெபியுங்கள். இன்னும் அவர்களை மாற்றும் வல்லமை யேசுவினிடத்தில் உண்டு.

# கேள்வி ? பதில்!

### தேவனுடைய பரிசுத்தவான்களாகிய நாம் லெஸ்பியன் (LGBTQ) வாழ்க்கையை பின்பற்றுகிறவர்களை எப்படி நடத்த வேண்டும்?

குடும்பமாகவோ தனிப்பட்ட ஒருவராலோ இந்த சூழ்நிலையை எதிர்கொள்வது கொஞ்சம் கடினமானதுதான். ஒவ்வொரு தீர்மானத்திலும் கிறிஸ்துவின் அன்பை வைத்திருக்க வேண்டும். இயேசு பாவிகளை சிநேகித்தார்.
மத் 9 : 10, 13-ல் பரிசேயர்கள் இயேசு ஏன் பாவிகளோடும் ஆயக்காரர்களோடு உட்கார்ந்து சாப்பிடுகிறார் என்று வினாவினார்கள். இயேசு பிரதியுத்தரமாக பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகம் உள்ளவர்களுக்கு அல்ல. நீதிமான்களை அல்ல. பாவிகளையே மனம் திரும்புதலுக் கென்று இரட்சிக்க வந்தேன்.
இயேசு பாவிகளுடைய பழக்கவழக்கங்களுக்கு உடன் பங்காளியாக இருக்க வில்லை.
அவர்களுடைய ஆத்மா கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை பெற விரும்பி அவர்களை நேசித்தார். கர்த்தர் சிருஷ்டித்த அனைத்து மனிதர்களையும் நாம் மரியாதையுடனும் அன்போடும் நடத்த வேண்டும். இருளில் நடக்கும் ஜனங்களை நாம் முற்றிலும் வெறுத்துவிட்டால் அவர்களுக்கு இரட்சிப்பின் நம்பிக்கையை எப்படி நம்மால் கொடுக்க இயலும்? உன்னை போல் பிறனை நேசி (மத்தேயு 22 : 39) என்று இயேசு கூறுகிறார். பாவ உலகில் நமக்கு பிறன் யார்? அன்பை காட்ட வேண்டும். மாறுபட்ட பாலின பழக்க வழக்கங்கள் இகழ்ச்சியானவை தான். ஆனால் அந்த மனிதர்களை இகழக் கூடாது. ஒருவரை நேசிப்பது என்பது அவர்களுடைய பாவத்தை ஏற்றுக் கொள்கிறோம் என்று அர்த்தமல்ல. ஆனாலும் பல சூழ்நிலைகளில் அதாவது ஓரினச்சேர்க்கையாளர்களை நேசிக்கிறோம் என்பதனால் அவர்கள் திருமணத்திற்கு சென்று அவர்களை ஆதரிக்க நம்மால் முடியாது. கூடாது. நம் குடும்பத்தை பாதுகாக்கவும் இளம் தலைமுறையினர் தவறான பழக்கத்தை கற்றுக் கொள்ளாதிருக்கவும் நாம் சில கட்டுப்பாடான வழிமுறைகளை இந்த மாதிரியான சமூகத்தினர் இடையே பழகும் போது கைக்கொள்ள வேண்டும்.
எதை செய்தாலும் கிறிஸ்துவின் ஆவியுடனே கூட செய்யுங்கள். மிக முக்கியமாக அவர்களுடைய இரட்சிப்புக்காக அதிகமாக ஜெபியுங்கள்.

### ஒரே பாலினம் மீது எனக்கு ஒரு தாக்கம் ஏற்பட்டால் நான் என்ன செய்வது?

எதிரியானவன் ஒரே பாலின உறவுகளை வளர்ப்பதில் விரைந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறான். ஒரே பாலின ஈர்ப்பு கொண்டால் உடனடியாக ஜெயம் என்னும் ஆயுதத்தைக் கொண்டு எதிரியான பிசாசானவன் கொண்டு வரும் மாம்சிக இச்சையை எதிர்கொள்ள முடியும். தெய்வீக விடுதலையின் வல்லமையால் பாவத்திலிருந்து ஜெயிக்கும் வல்லமை பெற்றுவிடுவதால் உலக இச்சைகளின்று நம்மால் விடுபட முடியும். மாம்சீக இச்சை வரும்போது விடுதலை உண்டு. சமுதாயத்தில் பாலின மாற்றங்கள் அதிகரித்து வருவதால் நமக்கும் சோதனை நேரிட வாய்ப்பு இருக்கிறது. அனுபவங்கள் சூழ்நிலைகள் சிலரை பாவத்தில் விழத்தள்ளும் சோதனை வருவது பாவமல்ல அந்த பாவத்திற்குள்ளாக நாம் செல்வதுதான் பேராபத்து. மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார் (1 கொரி 10 : 13).

அந்த ஈர்ப்பை உள்வாங்காதீர்கள். அது சார்ந்த காரியங்கள் கவனிப்பது, அதனோடு தொடர்புடைய மக்களிடம் பேசுவது அந்த ஈர்ப்பை இன்னும் அதிகரிக்கும். பரிசுத்தமற்ற பாவ வாழ்வை தூண்டும் காரியங்களை புறம்பே தள்ளுங்கள். உங்களுடைய போராட்டத்தில் நீங்களும் யுத்தம் புரிந்து தேவன் பட்சம் நில்லுங்கள். பரிசுத்தமாய் உங்கள் மனம் மற்றும் இருதயத்தை காத்துக் கொள்ள உதவி செய்யும் கர்த்தாவே என்று சொல்லிக் காத்திருந்து ஜெபியுங்கள். அனுதினமும் தேவனோடு நடப்பதாலும், பரிசுத்த மனிதர்களோடு ஐக்கியம் கொள்வதாலும் நீங்களும் பரிசுத்தமாய் உங்களை காத்துக் கொள்ள முடியும். திருமணமாகாதவராக நீங்கள் இருப்பீர்களானால், ஒரே பாலின திருமணம் மேற்கொண்ட சிலரோடு உங்களுக்கு இருக்கும் நட்பை விட்டு விலகுங்கள். ஏனெனில் சில சமயம் அந்த நட்பு உங்களை ஒரே பாலின திருமணத்திற்கு உள்ளாக இழுத்து விடும். மிகப்பெரிய பாவம் கிறிஸ்துவிலே ஜெயம் எடுங்கள். ஏற்ற துணை தேவன் தருவார். உற்சாகமடையுங்கள். சோதனையை ஜெயிக்கும் வல்லமை பாவத்தை மேற்கொள்ளும் அதிகாரம் உங்களுக்கு உண்டு. உங்களுக்கான ஜெயமும் சமாதானமும் தேவன் தருவார். ■

Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide Indian Constitution Act 25th & 19(1) Section
TAMIL EDITION - FOR PRIVATE CIRCULATION ONLY


உங்களுக்குத் தெரியுமா?

சில 7% அமெரிக்கர்கள் லெஸ்பியன் இருபாலினத்தவர் என ஆராய்ச்சி புள்ளியியல் மையம் 2022 ல் 12147 வாலிப சகோதர சகோதரிகளிடம் எடுத்த ஆய்வில் தெரியப்படுத்தியுள்ளது
30 வயதுக்கு குறைவான 17% பேர் லெஸ்பியன்களாக இருக்கின்றனர். 30– 49 வயதினர் 8% பேர் 50–64 வயதினர் 5% பேர் 65 வயதிற்கு மேற்பட்டவர் 2% பேர் (பிரௌஸன், அன்னா) 23, 2023
30 நாடுகளை கணக்கிட்ட போது சுமார் 3% பேர் லெஸ்பியன் 4%பேர் இருபாலினத்தவர் 1% பேர் ஓரினச்சேர்க்கையாளர், 1% பேர் பால் வேறுபாடற்றவர்களாகவும் உள்ளனர்.

ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை

## ஒருவர் பாரத்தை ஒருவர் சுமப்பது

ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள். கலா 6 : 2



பாவக்கறையினால் உடைந்து போன உலகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அழிந்து போகும் மாம்ச இச்சைக்கு இடம் கொடுத்து பழக்கவழக்கம் ஈர்ப்புகள் அடிமைத்தனம் என்று மனிதர்கள் போராடிக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் தனித்துவமாய் தங்களுடைய அடையாளத்தையும் சமாதானத்தையும் தேட முயற்சிக்கிறார்கள். குடும்ப உறவுகள் பிளவுபட்டு போய்க் கொண்டிருக்கிறது. இதற்கு முன் இல்லாதது போல எதிர்மறை எண்ணங்களும், மன அழுத்தங்களும் நம் இளம் சமுதாயத்தினர் இடையே அதிகரித்துக் கொண்டே வருகிறது. மன நோய்களும் உணர்ச்சிவசப்படும் பிரச்சினைகளும் மிகவும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

உலகத்தின் மோக அலையானது வாழ்க்கையை அழித்துக் கொண்டே இருக்கிறது. இப்படியாக இருண்டு போய்க் கொண்டிருக்கையில் பிரகாசமான நம்பிக்கை இயேசு கிறிஸ்துவினிடத்தில் உண்டு . உடைந்து போகாதே என்றென்றுமான நித்திய பரலோக பாக்கியம் நமக்கு உண்டு. சோதனைகளின் மத்தியில் இயேசுவின் வெளிச்சம் நம்பிக்கை சமாதானம் என்றுமே நிச்சயம். போராடுகிற மக்களுக்கு உங்களால் ஏதாவது நற்செய்தி சொல்ல இயலும். ஜனங்களுடைய பிரச்சனைகளை தீர்க்க உலகத்தில் கூடாது. நற்செய்தியின் மகிமையான நம்பிக்கையே ஒரு தீர்வு. வேதம் நமக்கு போதிக்கிறது ஒருவர் பாரத்தை ஒருவர் சுமருங்கள் என்று மற்றவர்களுடன் பிரச்சனைகளில் அவர்களோடு தோள் கொடுத்து பொறுமையாக அவர்கள் அவற்றினின்று விடுபட முயற்சிப்போம். உடைந்து போன மக்களுக்கு தேவை அன்பு, கவனிப்பு, ஆதரவு மற்றும் புரிந்துகொள்ளுதல். நாம் அவர்களை நிலைப்படுத்த முடியாது. ஆனால் அவர்களுக்காக நாங்கள் இருக்கிறோம் என்று பலப்படுத்தலாம். நாம் கவனித்து ஜெபித்து நம்பிக்கையை கொடுத்து இரட்சகரண்டையில் வழி நடத்துவோம். மனுஷனால் கூடாதது தேவனால் கூடும்.

ஒருவர் பாரத்தை ஒருவர் சுமப்பது எளிதல்ல. ஆனால் அதுதான் நம் அழைப்பு. அதுதான் நம் கடமை. காயப்படுத்துகிறவர்களாகவோ அன்பு காட்டுகிறவர்களுக்கு மட்டுமே அன்பு காட்டுபவர்களாகவோ நாம் இருக்கக் கூடாது. ஒருவர் பாரத்தை நீங்கள் சுமக்கும் போது காயப்படுத்தப்படலாம். வார்த்தைகளால் சிலர் உங்களை வேதனைப்படுத்துவார்கள் அவர்களுடைய சூழ்நிலைகளால் ஒருவேளை அப்படி சொல்லி இருக்கலாம் என்று எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் அவர்களை கைவிட்டால் வேறு எங்கே செல்வார்கள்? கர்த்தர் உங்களுக்காக நீடிய பொறுமை உள்ளவராக இருப்பது போல நீங்களும் கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றவும் அதே நீடிய பொறுமையும் அன்பையும் பிறருக்கு காண்பித்து உதவுங்கள். நம் அன்பும் ஆதரவுமே அவர்களுக்கு கிறிஸ்துவின் அன்பை காண்பிக்கும். மற்றவர்கள் பாரங்களை சுமக்கும் உங்கள் ஒவ்வொருவரையும் கர்த்தர் தாமே ஆசீர்வதிப்பாராக. ஆமென். ■

CONTACT :-

**The Editor,
Gospel Truth,
P.O. Box - 54
Pollachi Town
INDIA - 642 001.**

Email :
vedhacog1954@gmail.com

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

**THE CHURCH OF GOD** *Worship Place:*

**2 / 227 - Church Street, Kolarpatti, Pollachi - 642 107**

**தேவசபை** ஆராதனை நடைபெறும் இடம் :

**2 / 227, சர்ச் தெரு, கோலார்பட்டி, பொள்ளாச்சி - 642 107**

**SUNDAY SERVICE : 10 AM - ஞாயிறு ஆராதனை : காலை 10 மணி**

எந்த சபைக்கும் போகாதவர்கள் எங்களுடன் பரிசுத்த ஆராதனையில் கலந்துகொள்ள அழைக்கின்றோம்.

**Come & Worship with Real Truth**

Tamil Editor : W.S.VEDHA, THE CHURCH OF GOD, 2/227 CHURCH STREET,-KOLARPATTI & P.O, SOUTH INDIA - 642 107. Cell : 0091 95975 62641.
Team : V.Selvam, V.Jayanathan Gnanarajan, V.J.Sam kirubaharan
Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316